திருமங்கலம் வட்டம், சந்தையூர் அருகே அமைக்கப்பட்ட ஏரி.

*வினா எண் 275—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம் சந்தையூர் அருகே 10 இலட்சம் செலவில் ஏரியொன்று புதிதாக அமைக்கப்பட்டதா ?

(ஆ) அந்த ஏரி தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

நிலத்தடி நீரியல் ஆய்வுகள் நடத்தும் திட்டம்.

*வினா எண் 276—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் இலவசமாக நிலத்தடி நீரியல் ஆய்வுகள் நடத்தித்தர அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இலவசமாக இல்லாமல் குறைந்த தொகைக்கு செய்து கொடுக்கலாமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏழை எளியவர்களுக்கு அல்லது ஆதி திராவிட மக்களுக்குக்கூட அவர்களுக்கு நீதி கிடைக்காது அல்லது அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்ல முடியாது என்ற நிலையிலே நாம் இலவசமாக அவர்களுக்கு அந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். ஆனால் விவசாயத்தைப் பொறுத்தவரையிலே குறைந்தபட்சம் இந்த நிலத்தடி நீரியலைப் பார்க்கின்றவர்கள் எங்கிருக்கிறார்கள் என்றுகூட சில விவசாயிகளுக்குத் தெரியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, ஒரு ஒன்றியத்திற்கு இரண்டு மாதங்கள், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஒருவரை அனுப்பி வைத்து அந்தத் தேவையின் அடிப்படையில் இலவசமாகச் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1983 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, தமிழகத்திலுள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களில் எந்தெந்தப் பகுதிகளில் எப்படி நிலத்தடி நீர் இருக்கின்றது என்கின்ற குறிப்புகளை இப்பொழுது வைத்திருக்கிறோம். ஒரு விவசாயி தன்னுடைய நிலத்திலே நிலத்தடி நீரைப் பயன்படுத்த வேண்டுமென்று விரும்பினால், ஆய்வு செய்து நிலத்தடி நீர் இருக்கிறதா என்பதைப் பார்த்துவிட்டு கிணறு தோண்டுவாரேயானால் அந்தக் கிணறு பொய்த்துப் போகாது. அவர்கள் ஏதோ மரபு வழியாக சிலரைப் பயன்படுத்தி கிணறு தோண்டுகிறார்கள். பலர் வெற்றி பெற்று விடுகின்றனர் ; சில பொய்த்துப் போகின்றன, கடன் வாங்கி பிறகு கட்ட முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, அவர்களுக்கு ஒரு குறைந்த தொகையை வசூல் செய்து கொண்டு செய்யலாம். இல்லையென்று சொன்னால், இலவசம் என்று வருகின்றபொழுது எல்லோருக்குமே போய்ச் செய்ய வேண்டும். கிணறு வெட்ட விரும்புகிறார்களோ இல்லையோ எதற்கும் பார்த்து வைத்துக் கொள்ளலாமே என்ற எண்ணம் கூட வந்து விடும். எனவேதான் குறைந்த தொகையாக வசூல் செய்யலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

[முற்பகல் 10-10]

நிலத்தடி நீரின் அளவை உயர்த்திடுவதற்கான திட்டம்.

*வினா எண். 277—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் நிலத்தடி நீர் குறைந்து வருவதால் எதிர்காலத்தில் குடிநீர் கிடைப்பது கடினம் என்பதை அரசு அறியுமா?

(ஆ) அக்குறையைப் போக்க ஏரிகள், குளங்கள், அமைக்க அரசிடம் Crash Programme திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) காட்டாறுகளின் குறுக்கே ஏரிகள், குளங்கள், சிறப்புச் சிறுபாசன திட்டத்தின் கீழ் அமைக்கப்படுகின்றன. அவைகளில் தேக்கப்படும் மழைநீர் நேரடிப்பாசனதுக்கு பயன்படுவதுடன், அப்பகுதியைச் சுற்றிலும் நிலத்தடி நீர் உயரவும், ஏதுவாகிறது. நிலத்தடி நீரை உயர்த்தும் நோக்குடன் சிறப்புச் சிறுபாசனத் திட்டத்தின்கீழ் ஆங்காங்கே பொருத்தமான இடங்களில் குட்டைகளும் அமைக்கப்படுகின்றன. இக்குட்டைகளில் தேக்கப்படும் மழை நீரால் குட்டையைச் சுற்றிலும் உள்ள பகுதியில் நிலத்தடி நீர் உயருகிறது. கசிவு நீர் குட்டைகள் அமைக்கும் திட்டத்தினால் நில நீர் அளவு ஏற்றம் ஏற்படுகிறது.